# ஆயரின் ஆசி மடல்



*கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே!*

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் இந்த ஆண்டின் பதினொரு மாதத்தைக் கர்த்தர் காணச் செய்தார். ஒவ்வொரு மாதமும் கர்த்தர் கொடுத்த அளவில்லாத நன்மைகளுக்காக அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்துவோம். இந்த மாதத்தின் முதல் நாள் “சகல பரிசுத்தவான்களின் திருநாள்” இந்த உலகத்தில் கர்த்தருக்காக பணி செய்து பாடுபட்டு பரலோகத்தில் இருக்கிற அனைத்து பரிசுத்தவான்களையும் நாம் நினைவுகூற அழைக்கப்பட்டு இருக்கிறோம். மேலும் நவம்பர் 2ம் தேதி நமது மத்தியில் வாழ்ந்து மறைந்து ஆண்டவருடன் இருக்கும் நமது முன்னோர்களை நினைவுகூறும் “சகல ஆத்துமாக்களின் திருநாளாக” ஆசரிக்கிறோம். இந்த மாதம் கர்த்தர் நமக்கு தரும் வாக்குத்தத்தம்

**“அவர் தமது பரிசுத்தவான்களைக் கைவிடுவதில்லை”** சங்கீதம் 37:28

உலகில் கைவிடப்பட்ட நிலையில் அநேகர் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். உலக வாழ்க்கையில் நாம் நம்புகிறவர்கள் நம்மை கைவிட்டுவிடுவார்கள். ஆனால் கர்த்தர் நம்மை கைவிடுவதில்லை என்று வாக்குக் கொடுத்து இருக்கிறார். நமது ஆண்டவர் கைவிடாதவர், மாறாதவர், தாய் தன் பிள்ளையை மறந்தாலும் கர்த்தர் நம்மை மறக்கமாட்டார். இந்த மாதத்தில் யாரையெல்லாம் கைவிடமாட்டார் என்பதை குறித்து சிந்திப்போம்.

## 1. அழைத்தவர்களை கைவிடுவதில்லை :

இந்த உலகத்தில் யார் எல்லாம் கர்த்தரால் அழைக்கப்பட்டு இருக்கிறார்களோ, அவர்கள் பாக்கியவான்கள். கர்த்தர் அவர்களை ஒருபொழுதும் கைவிடுவதில்லை. கர்த்தர் தமது பணியினை நிறைவேற்ற பலரை அழைத்திருக்கிறார். கர்த்தர் முற்பிதாக்களில்



ஒருவரான யாக்கோபுக்கு தரிசனமாகி **“உன் சந்ததியை பெருகப் பண்ணுவேன், உன்னை ஆசீர்வதிப்பேன், போகிற இடமெல்லாம் உன்னோடு இருப்பேன். நான் உனக்கு சொன்னதை செய்யுமளவும் உன்னை கைவிடுவதில்லை”** என்றார். உபா 31:8ல் மோசே யோசுவாவை பார்த்து **“கர்த்தர் உன்னை கைவிடுவதில்லை”** என்று நம்பிக்கையை கொடுத்தார். கர்த்தர் தனிப்பட்ட மனிதனை மட்டும் கைவிடுவதில்லை, அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட மக்களையும் கைவிடுவதில்லை. தம்மால் தெரிந்து கொள்ளப்பட்ட இஸ்ரவேல் மக்களை அவர் கைவிடமாட்டார். மோசே இஸ்ரவேல் மக்களை பார்த்து (உபா 31:6) **“அவர் உன்னை விட்டு விலகுவதும் இல்லை, உன்னைக் கைவிடுவதும் இல்லை என்று சொன்னான்”** உபா 31:8ல் “கைவிடுவதில்லை” என்று வாக்குப்பண்ணியிருக்கிறார்.

## 2. பரிசுத்தவான்களை அவர் கைவிடுவதில்லை :

திருச்சபையில் பாரம்பரிய பரிசுத்தவான்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவும், அவர்களை நினைவுகூறவும் அழைக்கப்பட்டு இருக்கிறோம். நமது சபையை விட, கத்தோலிக்க திருச்சபை பரிசுத்தவான்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். யார் பரிசுத்தவான்கள்? ஆண்டவர் மேல் அன்புகூர்ந்து, அவரை பாடி கீர்த்தனம் பண்ணுகிறவர்கள். அவர்கள் கர்த்தருக்குப் பயந்து இருப்பார்கள். பரிசுத்தவான்களின் ஆத்துமா கர்த்தரால் காப்பாற்றப்பட்டிருக்கும். பரிசுத்தவான்கள் கெம்பீரித்து பாடுவார்கள். பரிசுத்தர்கள் கனத்திற்கு உரியவர்கள், இந்த பரிசுத்தவான்கள் யாவரும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்காக இவ்வுலகில் பாடுபட்டவர்கள் இந்த உலகத்தில் உலக மக்களிடம் அன்பு பாராட்டி பண்புடன் வாழ்ந்து அவர்களுக்கு சேவை செய்தவர்கள், மேலும் மற்றவர்களுக்கு பயன்பட்டவர்கள் இவர்கள் தங்களுக்கு என்று வாழாமல் கிறிஸ்துவுக்காக, அவரது இராஜ்ஜியத்தின் மேன்மைக்காகவும், பிறரின் நல்வாழ்வுக்காகவும் வாழ்ந்தவர்கள். எல்லாவற்றிற்கும் மேலாக வெளி 7:14 **“இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக் குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்”**

அதாவது பாவமன்னிப்பு பெற்றவர்கள் என்று உரைக்கிறார். ஆகவே கர்த்தர் தமது பரிசுத்தவான்களைக் கைவிடுவதில்லை.

**3. நீதிமானை கைவிடுவதில்லை :**

**"நீதிமானை ஒருபோதும் தள்ளாடவொட்டார்" சங் 55:22** கர்த்தர் நீதிமான்களை ஒருபொழுதும் கைவிடுவதில்லை. நீதிமான் நித்திய கீர்த்தியுள்ளவன். சங்கீதம் 37:25 **"நீதிமான் கைவிடப்பட்டதையும், அவன் சந்ததி அப்பத்துக்கு இரந்து திரிகிறதையும் நான் காணவில்லை".** நீதிமான் பனையைப் போல செழிப்பார்கள். யார் இந்த நீதிமான்? தீமையை விட்டுவிலகி, நன்மை செய்து, கர்த்தரை விசுவாசித்து, கர்த்தருக்கு பிரியமான வழியில் நடக்கிறவன். நீதிமான்களுக்கு வரும் துன்பங்கள் அநேகம். கர்த்தர் அந்த துன்பங்களிலிருந்து விடுவிக்கிறார். பஞ்ச காலத்தில் அவனை உயிரோடு காக்கிறார். ஆபத்து காலத்தில் கர்த்தர் அவனை கைவிடுவதில்லை.

நோவா தான் வாழ்ந்த காலத்தில் உள்ள ஜனங்களில் நீதிமானும், உத்தமனுமாயிருந்தான். மேலும் அவன் தேவனோடு சஞ்சரித்துக் கொண்டிருந்தான் எனவேதான் கர்த்தர் ஆதி 7:1 **"இந்த சந்ததியில் உன்னை எனக்கு முன்பாக நீதிமானாகக் கண்டேன்"** விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாம் வாழ்க்கையில் கர்த்தரை விசுவாசித்தான் அவனை கர்த்தர் நீதிமானாக எண்ணினார். நீதிமான் நினைத்த காரியம் அவனுக்கு நடக்கும். கர்த்தர் நீதிமானை கைவிடுவதில்லை. நீதிமான் போதும் என்கிற மனதுடன் வாழ்வதனால் கர்த்தர் அவனை கைவிடுவதில்லை.

இந்த மாதத்தில் கிறிஸ்து வருகைக்கான காலத்துக்குள் பிரவேசித்து இருக்கிறோம். வருகிற நாட்களில், கிறிஸ்துமஸ் காலத்தில் CARE மூலம் கீதபவனி வரும்பொழுது உற்சாகமான காணிக்கை கொடுத்து கிறிஸ்துமஸ் காலத்தில் ஏழை, எளிய மக்களை தாங்கும்படியாக அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

**கர்த்தர் நம்மையும் நமது குடும்பங்களையும் ஆசீர்வதிப்பாராக!**

*இறை பணியில்,*

**Rev. R.A.J. செல்வின்துரை**



# ஊழியத்தின் பாதையிலே...

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, உலக இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் இனிதான நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். கர்த்தர் உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக.

அக்டோபர் மாதம் ஊழியங்களை சிறப்பாக செய்ய ஆண்டவர் கிருபை செய்தார். மாதத்தின் முதலாம் நாளில் அதிகாலை 5.00 மணி வாக்குத்தத்த ஆராதனையோடு பரிசுத்த ஓய்வுநாள் ஆரம்பித்தது. அன்று காலை 11.30 மணிக்கு ஆண்கள் ஐக்கிய சங்க 44வது ஆண்டுவிழாவை முன்னிட்டு சிறப்பு திருமறைத்தேர்வு நடைபெற்றது. அதில் சுமார் 60 பேர் கலந்து கொண்டார்கள். சிறுவர்கள், வாலிபர்கள், பெரியவர்கள் என அனைத்து பிரிவினரும் கலந்து கொண்டது மகிழ்ச்சியை அளித்தது.

வாலிப ஆண்கள் ஐக்கிய சங்கத்தின் 48வது ஆண்டுவிழா அக்டோபர் 7 மற்றும் 8 ஆகிய நாட்களில் நடைபெற்றது. 07.10.2023 அன்று காலை 10 மணி முதல் மணி 4.00 மணி வரை, வாலிபர் எழுப்புதல் முகாம் நடைபெற்றது. அதிலே இயேசு விடுவிக்கிறார் ஊழியத்திலிருந்து சகோ. அவினாஷ் அவர்கள் செய்தி கொடுத்தார்கள். மாலை 7.00 மணிக்கு சகோ. சாம் ஜெபராஜ் அவர்கள் சிறப்பு கன்வென்ஷன் கூட்டம் நடத்தினார்கள். 8.10.2023 ஞாயிற்றுகிழமை இரவு 7.00 மணிக்கு நெல்லை அப்போஸ்தலன் Rev. C.T.E. ரேனியஸ் ஐயர் அவர்களின் வாழ்க்கை வரலாறை ஒலி, ஒளி நாடகம் மற்றும் கலை நிகழ்ச்சிகளாக சிறப்பாக நடத்தினார்கள். ஏராளமான திருச்சபை மக்கள் கலந்து கொண்டார்கள்.

அக்டோபர் 14 மற்றும் 15 ஆகிய நாட்களில் ஆண்கள் ஐக்கிய சங்கத்தின் 44வது ஆண்டுவிழாவை முன்னிட்டு சிறப்பு கன்வென்ஷன் நடைபெற்றது. 14.10.2023 அன்று காலை 10 மணி முதல் 1 மணி வரை சகோ. டேவிட் விஜயகாந்த் மற்றும் Dr. ஜெலிந்தா டேவிட் அவர்கள் இணைந்து குடும்ப ஆசீர்வாத கூட்டம் நடத்தினார்கள். சுமார் 400க்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர். சனி மற்றும் ஞாயிறு மாலை 7 மணிக்கு சிறப்பு கன்வென்ஷன் நடைபெற்றது. திருச்சபை மக்கள் அனைவரும் கலந்து கொண்டது மகிழ்ச்சி.

15.10.2023 அன்று மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்புக் கூட்டமும், காலை 11.30 மணிக்கு நடைபெற்றது. தொடர்ந்து அவர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது. தொடர்ந்து ஆண்கள் ஐக்கிய சங்க பொதுக்குழு கூடினது.

மேலும் 14.10.2023 சனிக்கிழமை அன்று காலை 9.00 மணி முதல் திருமண்டல திறன்காண் போட்டிகள் நடைபெற்றது. நம்முடைய திருச்சபையின் சார்பாக திரு. ஹேரீஸ் தேவதாஸ், திருமதி. எலிசபெத் நோவா, Miss. மெர்ஸி ஷைனி, வாலிப பெண்கள் மற்றும் திருமணமான பெண்கள் ஆகியோர் கலந்து கொண்டார்கள். அந்தப் போட்டியில் திருமணமான பெண்கள் பிரிவில் முதல் பரிசு நம்முடைய திருச்சபையார் பெற்றார்கள், அவர்களுக்கு தூத்துக்குடி சண்முகபுரம் ஆலயத்தில் வைத்து பரிசு கொடுக்கப்பட்டது.

21.10.2023 சனிக்கிழமை மாலை 4 மணிக்கு திருமண்டல தோத்திர பண்டிகையை முன்னிட்டு மாபெரும் பவனி நடைபெற்றது. அந்த பவனியில் நம்முடைய திருச்சபையைச் சேர்ந்த தாய்மார் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

25.10.2023 அன்று 20வது ஆண்டு திருமண்டல தோத்திர பண்டிகை, நாசரேத் தூய யோவான் கதீட்ரல் ஆலயத்தில் வெகு விமர்சையாக நடைபெற்றது. திருமண்டல நிர்வாகஸ்தர்கள் மற்றும் ஊழியர்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள். நம்முடைய திருமண்டலத்திற்காக தொடர்ந்து ஜெபித்துக் கொள்ளுங்கள்.

29.10.2023 ஞாயிறு அன்று பாலர் ஞாயிறு ஆசரிக்கப்பட்டது. காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை திருமண்டல பாலியர் நண்பன் ஊழியர்கள் மூலமாய் சிறப்பாக நடைபெற்றது. இந்த மாதம் 12ம் தேதி நடைபெறும் வாலிப பெண்கள் ஐக்கிய சங்க பண்டிகைக்காக ஜெபிப்போம். கர்த்தர் பெரிய காரியங்களை செய்வாராக.

*இறை பணியில்*

**Dn. T. ஆனந்தமணி**

**Rev. M. காலேப் மேன்சிங்**
உதவி குருக்கள்

**Rev. R.A.J. செல்வின் துரை**
சேகரத்தலைவர்



## பிறந்தநாள் ஆசரிப்பவர்கள்

**நவம்பர் 1**

திருமதி. B. பானுமதி
செல்வன். A. கிறிஸ்டல் மணி
திரு. T. ஞான சுந்தரம்
திருமதி. J. பிச்சைமணி
திருமதி. சோபி ராஜதுரை
திருமதி. A.S. லதா
செல்வன். ரூஃபஸ் ஜெபர்சன்
செல்வி. V. ஸ்டெபி ஷரோன்
செல்வன். J. இம்மானுவேல் ஜெரிஸ் ராஜ்
செல்வன். E. ஜோஷ்வா ரத்தினராஜ்
திரு. T. சுவாமி தாசன்
செல்வி. ரொவினா
செல்வி. M. மேபல் வின்ஸியா
செல்வி. K. ஏஞ்சல் ஜீன் வின்சி
செல்வி. S. கீர்த்தனா
திருமதி. கிறிஸ்ஸல் சார்லஸ்

**நவம்பர் 2**

திருமதி. K. சரோஜா
செல்வி. V. ராஃபியா ஜோஸ்
செல்வன். T. பெவின் ஜோயல்
திரு. W. சதீஸ் ஜேசுதாசன்
திரு. T. பாஸ்கர்
திருமதி. T. எஸ்தர் கிரேஸ் ஸ்டெல்லா
செல்வன். N. ஜெப்ரின்
செல்வன். N. ஜெபின் கோல்டுவின்
செல்வன். I. அந்தோணி சூசை அஜய்

**நவம்பர் 3**

திருமதி. W. வயலட் ஜெயா
திரு. J. கிறிஸ்டோபர் ஜாண் சாமுவேல்
திருமதி. D. ஜெனிட்டா எப்ஸிபாய்
திரு. K. ஞானதுரை
செல்வன் M. ஜெபராஜ்
செல்வன். K. ஆரோன் செல்வ டேனியல்
திரு. R. ஹென்றி தாமஸ்
செல்வன். S. ஜெப்ரின் சாமுவேல்
செல்வன் S. ஜெரூப் மோசஸ்
செல்வி. G. மெர்ஸியா
திரு. D. காட்வின்

**நவம்பர் 4**

திரு. R. சார்லஸ் கென்னடி
செல்வி. J. ஜெபா
திருமதி. S. விஜயா
செல்வி. D. ஜாஸ்லின் பெர்ஸிஸ்
திரு. S.D.K. ராஜன்
திரு. R. தேவாசீர்வாதம்
திருமதி. P. ஜெலின்
திருமதி. செல்வி
திருமதி. A. எஸ்தர்
செல்வன். B. சாமுவேல்

**நவம்பர் 5**

திரு. J. அய்யாதுரை கென்னடி
செல்வன். W. ஜென்கின் வில்பிரட்
செல்வன். J. ஜெரோம் பிரவீன்ராய்
செல்வன். V. பெவின் ஜேக்கப் சாமுவேல்
திரு. I. தவமணி சாமுவேல்
திரு. I. தாமஸ்
திரு. M. ஐயாதுரை
திரு. D. எட்வின் ஜாண்சன்
திருமதி. J. லீலா ஜெயராஜ்
திருமதி. V. ரோஸ்மணி புனித ராணி
திருமதி. R. வனஜோதி

செல்வன். S. ராஜா

செல்வன். A. பிரைட் மோசஸ்

திருமதி. D. செல்வராணி

**நவம்பர் 6**

செல்வன். T. பவுல் ஐசக் பிரைட்டன்

செல்வன். கிளாஸ்டன் ஜேஸ்பர்

திருமதி. R. எபநேசர்

திருமதி. R. ராஜ்குமாரி கென்னடி

திரு. A. பிரசாந் செல்வகுமார்

செல்வி. P. பிளஸ்லின் அனி

செல்வன். J. ஜெஸ்வின் டைட்டஸ்

திரு. G. பீட்டர் எடிசன்

Rev. A.S. ஸ்டீபன் தனபால்

திருமதி. V. அருண்ராணி எஸ்தர் மெரியன்

செல்வி. A. ஜுடி பிராத்தனா

**நவம்பர் 7**

செல்வன். A. பிளஸ்ஸோ சாம் பீட்டர்

திரு. A. ரவி

திருமதி. P. ஜெயகொடி

செல்வன். C. ஷெரிப் செல்வகுமார்

திருமதி. C. மரியபிச்சை

செல்வி. G. ஜெர்ஷிதா

செல்வன். G. ஜெஃப்ரின் டேனியல்

திருமதி. G.E. ஜாய் லெட்

செல்வி. B. ஹரிஸ்

செல்வன். I. அலன் சாமுவேல்

**நவம்பர் 8**

திருமதி. S. பிரேமா

திருமதி. சாந்தினி சுஜாதா

செல்வி. A. ஜெஃபினா

செல்வி. J. கிரீட்டா

திருமதி. S. எப்சிபாய் கலைமணி

திரு. T. ராஜேஸ் குமார்

**நவம்பர் 9**

செல்வன். S.J. ஜோகன்

திரு. G. ஜாண் ஸ்டீபன்

திருமதி. சாந்தகுமாரி

திருமதி. P.P. ஈவ்லின் பானு

திருமதி. S. ஜாய் குளோரிபாய்

செல்வி. P. பெர்னிஸ் பால்

திரு. J.K. எட்வர்ட் ரத்ன சற்குணம்

திரு. G. ஜெயகுமார்

செல்வி. A. ப்ரீத்தா

பேபி. S. செல்வ ஜெஸ்வின் காமராஜ்

செல்வன் C. சுபாகரன்

திருமதி. ஏஞ்சலின் டிக்கின்சன்

செல்வி. J. ஜெரின் பிளஸ்சியா

செல்வன். C. அலெக்ஸாண்டர் சாமுவேல்

செல்வி. J. பாலின் சமியூலா

திரு. J. கிப்சன் சாமுவேல்

திருமதி. R. ஷைனி முகில்

**நவம்பர் 10**

செல்வி. S. ஜெருஷா ஜோசப்

திருமதி. J. எஸ்தர் ஜாய்

திருமதி. R. குளோரி

திருமதி. G. திலகாவதி

திருமதி. ஸ்டெல்லா

**நவம்பர் 11**

செல்வி. R. கெவினா நிலானி

திரு. ராஜு சாலமோன்

திருமதி. I. கஸ்தூரி

செல்வி. J. ஜெர்லின்

திரு. R. ஜேக்கப் ராஜன்

செல்வன் V. சிமியோன் ஷாம் விக்டர்

செல்வன். A. ஜாஸ்பர்

திரு. D. பாண்டியன்

செல்வி. S. கிறிஸ்டி கன்னி மரியாள்



திருமதி. D. ஹெலன்

**நவம்பர் 12**

திரு. R.G. மூர்த்தி

செல்வன். E. இனியன் நெகேமியா

திருமதி. R. ரினி கீர்த்தனா

திரு. D. பிரின்ஸ்

செல்வன். J. அருண் ஜோஸ்

திரு. M. ஜெயகர் பிரேம்குமார்

செல்வி. P. ஜோஸ்னா தங்கம்

திருமதி. J. கிப்டி ஜெனிபர்

செல்வி. A. அஜிரா பாலின்

செல்வன். J.S. ஜெஸ்வின்

திருமதி. P. எபநேசர் கிரேஸ்

**நவம்பர் 13**

திருமதி. ஜெபகனி

திரு. S. அகஸ்டின் செல்வகுமார்

செல்வி. J. ஜெனிபா

செல்வன். M. மோசஸ் ஸ்டீபன் ஜேக்கப்

திருமதி. G. மோனிக்கா

திரு. C. கிறிஸ்டோபர்

திருமதி. சுசீலா ராபர்ட்

செல்வி. J. கோல்டா அற்புதமலர்

செல்வன். R. பிரவீன்

திருமதி. தருமமணி

திருமதி. செல்வகுமாரி அருண்

செல்வன். A.W. ஜெரேம் ஜுவின்

செல்வி. E. ரொவினா

செல்வி. P. ஸ்டெசி

திரு. S. டேனி ரோமன் சிங்

**நவம்பர் 14**

திருமதி. J. டெல்சி சாந்தகுமாரி

திருமதி. N. ரூபி ஸ்டெல்லா

செல்வி. S. சௌமியா

திரு. தாராசிங்

திருமதி. ஜேஸ்மின் டால்டன்

செல்வி. V. கிறிஸ்டா

செல்வி. V. கிறிஸ்டினா

செல்வன். S. ஜெமர்சன்

திரு. D. பிரைட் சாமுவேல்

செல்வன். R. ஜோவேல் டேவிட்

செல்வன். J. ஷியாம் சுந்தர்

திரு. S. சந்திரசேகரன்

திருமதி. S. ஜெர்மிளா

செல்வன். D. திஷோன்

திரு. N. ஜேஸ்பர்

திரு. J. அருண்குமார்

திருமதி. J. தமிழ் செல்வி

**நவம்பர் 15**

திரு. B. கனிராஜ்

திருமதி. C.R. ஷாலினி கிறிஸ்டபல்

திருமதி. S. மரிய ரோஸ்லி

செல்வி. D. ஜேக்லின்

திருமதி. ஞானசெல்வம்

திருமதி. I. குணசீலி ரீனா

செல்வி. S. ஷேர்லி எஸ்தர்

**நவம்பர் 16**

செல்வி. S. ஜோஹன்னா பிரின்சஸ்

திரு. P. சாமுவேல் பிரேம்குமார்

திரு. G.S.R. எமில் செல்வன்

செல்வன். A. ஜேசன் சாம்ராஜ்

திருமதி. சுந்தரி தேவராஜன்

திரு. J.C. மாணிக்கராஜ்

திரு. V. ஜாண் வாசக்

திருமதி. T. ஞானசெல்வி

செல்வி. R. ஜெஸிந்தா தேவ தர்ஷினி

**நவம்பர் 17**

பேபி. A. அக்ஷன் சாம்ராஜ்

திருமதி. ஜெபா பிரபாகரன்

திரு. W. பென்னி
திரு. G.S.A. குட்டிசாம்
திருமதி. D. தேவ லாரன்ஸ்
செல்வி. N. ஜெனுவியா பிளாரன்ஸ் ஜெஸிந்தா
திரு. ஜாண் A. ஜோசப்

**நவம்பர் 18**

செல்வி. R. ஜோஷ்னா கேலிஸ்டா
திரு. P. ஜாண்சன் ஆசீர்
செல்வி. J. ஜடா ஸ்டெல்லா கிரேஸ்
திருமதி. R. நிர்மல்ராணி
செல்வன். J.V. ஜெஸ்வின் டைட்டஸ்
திருமதி. I. ஆதி லெட்சுமி (எ) ஏஞ்சல்

**நவம்பர் 19**

திருமதி. S. பூங்கொடி
திருமதி. S. எஸ்தர் சுந்தரம்
திரு. S. பாபு
திரு. J. வினோத்
திருமதி. C. செல்வராணி
செல்வன் D. பிரைட் டார்ஜர்
திருமதி. வினிட்டா அலெக்ஸாண்டர்
திரு. P. செல்வமணி
திரு. G. அஜித் ஜெயபாண்டியன்
திரு. நெல்சன்
திருமதி. J. கார்த்திகா

**நவம்பர் 20**

திரு. D. வேதபாலன் ராஜா
திரு. J. ஜெயசிங் சத்யராஜ்
செல்வன். S. சாம் மேத்யூ டேரியல்
திரு. J. சாம் பால் ஜாண்
திருமதி. T. சுகந்தி தனசிங்
திருமதி. பொன் ராணி
திருமதி. A. சுசீட்டா சத்யமூர்த்தி
திருமதி. J. சகாயமேரி வீனஸ்

**நவம்பர் 21**

திரு. S. ஜெய்குமார்
திருமதி. R. செல்வராணி
திரு. A. சாம் அருள் பிரசாத்
திரு. K. அல்பர்ட் மகாராஜ்

**நவம்பர் 22**

திருமதி. V. ரீனா சீலன்
திருமதி. J. தேவநேசம்
திருமதி. J. ரெஜினா
செல்வி. கெட்ஷி
திருமதி. ஜெனோவா
திருமதி. A. ஜெஸி வினோதினி
திரு. சாம் ராஜ பிரகாஷ்
திருமதி. E. பிரியங்கா
திரு. ராஜதுரை
திரு. J. ராஜீவ்

**நவம்பர் 23**

திரு. S. சாமுவேல் மாணிக்கராஜ்
திரு. J. மார்க் ஜெயின்
செல்வன். R. ராகேஷ் பென்சாம்
செல்வன். J. பிரசாந் ராஜ் பென்யமீன்
செல்வி. G. பெர்னிஷ் கிருபா
திருமதி. D. ஜெபினா
திரு. S. ஜெயக்குமார்
செல்வன் V. ரெஜின் சாலோன்
Dr. K. லதா ஜோன்ஸ்
திருமதி. ரீட்டா கிறிஸ்டினா ஆல்வின்
திரு. தினேஷ்
செல்வி. M. சினேகா சுகிர்தபாய்

**நவம்பர் 24**

திருமதி. J. பியோனா நிஷாகாந்தி
செல்வி. N. கெத்சியா ரேச்சல்
திருமதி. J. ஜெயா
செல்வி. P.S. மெர்ஸி
செல்வன். M. விஜய்



திருமதி. M. பூங்கொடி
செல்வன். J. ரூபன்
திருமதி. A. எஸ்தர் செல்லம்மாள்
செல்வி. S. தீபிகா ஞான ஜென்ஸி
திரு. S. ஜான் பொன்ராஜ்
திரு. J. சுரேந்குமார்
செல்வி. I. ஷாரோன் பிளஸ்ஸி
செல்வன். N. ஜோஸ்வா பால் ராஜா
திருமதி. R. ஜோதி

**நவம்பர் 25**

திரு. J. பெல்சன் துரைராஜ்
மாஸ்டர். A. இஷான் ஜெயஷீலன்
திருமதி. S. ஸ்வீட்லின் மெர்ஸி
திருமதி. G. ரஞ்சிதம்
திரு. M. ஆர்தர் பொன்ராஜா
திரு. S. ஜெபராஜ்
திருமதி. A. பிரியதர்ஷினி
திரு. அந்தோணி தானியேல்
செல்வன். R. ஜோன்ஸ்வின்
செல்வி. G. பிரின்ஸஸ் ஜென்சி
திரு. M. சண்முக ராஜேஷ்
செல்வி. B. அருணா

**நவம்பர் 26**

செல்வி. K. ரெனிஷா ஜாஸ்மின்
செல்வி. T. மனிஷா ஏஞ்சல்
திரு. V. அருள்மணி
செல்வன். M. ஜாண்சன்
செல்வன். M. சாமுவேல் காட்சன் அஜித்
செல்வன். O. எலியாஸ்
திரு. W. பிரபு டேனியல் துரை
திரு. M. பெலிக்ஸ்

**நவம்பர் 27**

திரு. S. இளங்கோ பாக்யராஜ்
திருமதி. R.S. கிளாரா தேவ கிருபா
செல்வி. K. ஹீபா ரியாஷினி ரேச்சல்
திருமதி. B. பாலின் பாக்கியம்
திருமதி. M. வள்ளி
திரு. A. வின்ஸ்டன் ஜெயகுமார்
திரு. B. அல்பர்ட் பிரபாகரன்

**நவம்பர் 28**

செல்வி. M. கிருபா ஸ்வீட்டி
செல்வன். R. காலேப் ஞானராஜ்
திருமதி. S. திவ்யா
திரு. P. ஜெயசந்திரன்
திரு. J. டேனியல்ராஜ்
செல்வி. A. ஜேன் கிறிஸ்டி

**நவம்பர் 29**

பேபி. R. ரூபன் அலிஃப்
திரு. J. ஆனந்தகுமார்
திருமதி. K. ஏஞ்சலின்
திருமதி. G. ஆனந்த செல்வி
திரு. R. கிங்ஸ்லி மனாசே
திருமதி. K. கிறிஸ்டி ஜாய்ஸ்லின்
திரு. G. ஹென்றி ஜோசப்

**நவம்பர் 30**

திருமதி. G. ஷீபா வினோதினி
திரு. J. ரீஸ்
திரு. T. வில்சன்
திருமதி. P. சிந்தா
செல்வி. J. ஜெனிபர்
திருமதி. சியாமளா சூசன்
திரு. R. ஜெபசிங்
செல்வன். M. ஜோவின் தவராஜ்
திரு. C. ரத்தினராஜ்

*கர்த்தர் உங்களை நீடித்த நாட்களாக திருப்தியாக்குவாராக.*
*உங்கள் அனைவருக்கும் எங்கள் அன்பான பிறந்தநாள் வாழ்த்துக்கள்*

## திருமண நாளை ஆசரிப்பவர்கள்

நவம்பர் 1 Mr. P. ராஜாசிங் & Mrs. R. ஜூலியட்

Mr. P. ஜெயகுமார் & Mrs. J. சோனியா

நவம்பர் 4 Mr. N. ஜேஸ்பர் & Mrs. J. தீபா குணசீலி

Mr. W. பாக்கியன் டேவிட் துரை & Mrs. J. கிளாரா ஜெயகீதா

Mr. S. பொன்ராஜன் சாமுவேல் & Mrs. S. பரிபூரண பாக்யவதி

Mr. P. ஜெயராஜ் & Mrs. பொன் பிளாரன்ஸ்

Mr. ஜோசப் டேனியல் & Mrs. சிநேகா செல்வராணி

நவம்பர் 5 Mr. B. ஜோசப் கனகராஜ் & Mrs. K. விமலா ஜீவமணி

Mr. M. ஆனந்த் பிராங்ளின் & Mrs. A. ஹேனா டெய்சி ஜெபசீலி

Mr. I. ஜூலியன் ஜெபக்குமார் & Mrs. J. சாந்தகுமாரி

Mr. M. ரிச்சர்ட் காலின்ஸ் & Mrs. R. கிரேஸி

நவம்பர் 6 Mr. X. அருள் பிலிப் கென்னடி & Mrs. B. பிரதீபா

நவம்பர் 7 Mr. D. ஞானராஜ் & Mrs. M. ஜெனிஃபர்

Mr. ஐசக் & Mrs. கனி செல்வி (எ) ஏஞ்சல்

Mr. G. ஜெயசிங் & Mrs. J. ஜூலியட் ஞானம்

Mr. G. சத்யப்ரியன் & Mrs. S. கலாவதி

Mr. V. தேவாசீர்வாதம் & Mrs. D. அன்னதாய்

Mr. M. ஜாண் & Mrs. J. மேரி சாந்தி

Mr. P. ராஜாசிங் & Mrs. R. ஜெஸிந்தா

Mr.P. இம்மானுவேல் கிருபாகரன் & Mrs. I. குளோரி ஜெபமலர்

Mr. D. கிளாஸ்டன் & Mrs. ரெஜினா ரோஸ்

Mr. P. சாமுவேல் & Mrs. S. மரிய பெல்ஷியா

Mr. J. நிக்சன் & Mrs. N. சோபனா

நவம்பர் 8 Mr. J. பிலிப் ஆனந்தராஜ் & Mrs. P. ராணி சாந்தி

Mr. G.S.A. குட்டி சாம் & Mrs. P.P. ஈவ்லின் பானு

நவம்பர் 9 Mr. S. சந்திரசேகரன் & Mrs. C. பால்ரதி

நவம்பர் 10 Mr. C. லெனின் ஆல்பர்ட் & Mrs. A. ஜாண்ஸி

Rev. A.S. ஸ்டீபன் தனபால் & Mrs. S. ஜேஸ்மின் பாக்கியவதி

நவம்பர் 11 Mr. டேவிட் செல்வகுமார் & Mrs. கிறிஸ்டி

Mr. V. அருள்மணி & Mrs. A. சௌந்திரலதா



Mr. J. தனராஜா & Mrs. T. மேபல் சோபியா

Mr. K. இஸ்ரவேல் & Mrs. I. எஸ்தர்

நவம்பர் 12 Mr. C. ஜோசப் யோகேஷ் & Mrs. அனிதா

Mr. நெல்சன் & Mrs. ஜெயமணி

நவம்பர் 13 Mr. M. மூர்த்தி & Mrs. C. ஜேஸ்மின்

நவம்பர் 14 Mr. S. தாமரை செல்வன் &

Mrs. P. ஜெஸியா பிரித்தா சமாதானம்

நவம்பர் 15 Mr. S. சசிக்குமார் & Mrs. S. தங்கஜோதி

Mr. W. பீட்டர் சுதாகர் & Mrs. P.S. மெர்லின்

Mr. L. ஜாண்சன் & Mrs. விஜயா

Mr. S. சாமுவேல் & Mrs. S. லீலா

Mr. B. சதீஷ்குமார் & Mrs. S. ஜோதி

Mr. P. டேவிட் சந்திரபோஸ் & Mrs. D. பாக்யநேசம்

Mr. S. ஏசா அன்புகுமார் & Mrs. E. மெர்ஸி

Mr. Y. ஜாண் தனபால் & Mrs. J. விமலா

Mr. M. பெலிக்ஸ் & Mrs. F. வனஜா

நவம்பர் 16 Mr. C. பிரைட் ராஜ் & Mrs. B. ஜெனிபா பிரதினா

Mr. S. தாமஸ் ராஜன் & Mrs. T. அமலிகுமாரி

Mr. P. ஜோசுவா பிரின்ஸ் & Mrs. J. ஜூடித் ஜோசுவா

நவம்பர் 18 Mr. D. பவுல்ராஜ் & Mrs. P. ஜீவா கனகமணி

Mr. P. யோவேல் & Mrs. V. வினோதினி சுஜிதா ராணி

நவம்பர் 19 Mr. ராஜேஷ் & Mrs. A. பெல்சிட்டா ராஜேஷ்

நவம்பர் 20 Mr. S. கெனாசிங் & Mrs. K. யூக்ளினா

Mr. P. அலெக்ஸ் ஞானபால் & Mrs. G. ஜிகிதா

Mr. ஜெகநாதன் & Mrs. J. ஆனந்தஜோதி

Mr. J. மைக்கேல் ஷியாம் & Mrs. D. ருஷ்மி ஞானபிரதீபா

நவம்பர் 21 Mr. S. ஆசீர்ராஜ் & Mrs. A. வாசுகி

நவம்பர் 22 Mr. D. இஸ்ரவேல் பால்ராஜ் & Mrs. ஷீபா

Mr. S. நேசராஜா டியூக் குமார் &

Mrs. D. அனிதா ஜெயந்தி பியூலா

Mr. சாம் ராஜ பிரகாஷ் & Mrs. பிரியா ஆல்கா டான்டஸ்

நவம்பர் 23 Mr. D. பொன்சேகர் & Mrs. நவரோஜ்

Mr. P. கார்த்திகேயன் & Mrs. K. சரண்யா

நவம்பர் 25 Mr. V.J.J. ஜாண்சன் & Mrs. ஷீலா ஜாண்சன்

Mr. K. சாலமோன் ராஜா & Mrs. S. முத்து ரோஷினி

Mr. R. ஜெபஸ்டின் இம்மானுவேல்ராஜ் & Mrs. H. ஜெபா மார்க்ரெட் சப்திகா

நவம்பர் 26 Mr. D. ரத்தினராஜ் & Mrs. R. எஸ்தர் செல்வசுந்தரி

Mr. B. அல்பர்ட் பிரபாகரன் & Mrs. A. எபநேசர் கிரேஸ்

நவம்பர் 27 Mr. S. ஜெய்குமார் & Mrs. J. திவ்யா

Mr. D. சாமுவேல் அப்பாவு & Mrs. S. பத்மா

நவம்பர் 28 Mr. G. பாலசிங் & Mrs. B. சுஜா

நவம்பர் 29 Mr. D. செல்வராஜ் & Mrs. S. சுவியஸ் சந்திரா

Mr. S. அஜித் சாலமோன் நிவின் & Mrs. A. ஜெரோ

Mr. K. அல்பர்ட் மகாராஜ் & Mrs. வனஜா

நவம்பர் 30 Mr. M. முத்துகுமரன் & Mrs. T. மெர்ஸி ஹெப்ஸிபா ஜென்ஸி

Mr. R. கிங்ஸ்லி மனாசே & Mrs. K. ஜெனிஷா

Mr. A. எட்வர்ட் ஞானராஜ் & Mrs. ஜெயராணி

Mr. S.M. பால்ராஜ் & Mrs. P. சுகந்தி

பிறந்த நாள், திருமண நாள் ஆசரிப்போரை கர்த்தருடைய ஆலயத்திலிருந்து வாழ்த்தி ஆசீர்வதிக்கிறோம். அன்றைய தேதிகளில் காலை 5.30 மணி ஆராதனைகளில் உங்களுக்காக சிறப்பு பிரார்த்தனை ஏறெடுக்கப்படுகிறது.
அனைவரும் கலந்து கொண்டு ஆண்டவரின் நிறைவான ஆசீர்வாதத்தை பெறுவீர்களாக.

## அக்டோபர் மாதம் ஞானஸ்நானம் பெற்றவர்கள்

**குழந்தை ஞானஸ்நானம்**

01.10.2023 T. மோனிகா அன்ஸி

T. மனிஷா ஏஞ்சல்

17.10.2023 B. லியா செண்ட்ரியா

ஞானஸ்நானத்தின் மூலம் திருச்சபையில் இணைந்திருக்கும் இவளை வாழ்த்தி வரவேற்கிறோம். நல்ல மேய்ப்பனான தேவன்தாமே இவர்களை ஜீவிய காலமெல்லாம் புல்லுள்ள இடங்களில் மேய்த்து, நன்மையினாலும், கிருபையினாலும் முடிசூட்டும்படி ஜெபிப்போம்.



## அக்டோபர் மாதம் நமது ஆலயத்தில் திருமண பந்தத்தில் இணைந்த புதுமண தம்பதிகள்

11.10.2023 திரு. B. ஜோவின் காலேப் & திருமதி. E. பிரியங்கா

25.10.2023 திரு. G. மோசஸ் சுந்தர்சிங் & திருமதி. J. அனிஷ் நிக்கோலா

27.10.2023 திரு. N. அருண் டேனியல் & திருமதி. E. சோனியா ரெட்லினா

திரு. V. ஜெயக்குமார் & திருமதி. V. அனு தேவதர்ஷினி

திருமண பந்தத்தில் இணைந்த இப்புதுமண தம்பதிகளை வாழ்த்துகின்றோம். இவர்கள் வாழ்வாங்கு வாழ்ந்து, வையகத்தில் எல்லா சீருடனும், சிறப்புடனும், எல்லாச் செல்வங்களும் பெற்று வாழ ஜெபிப்போம்.

## அக்டோபர் மாதம் இளைப்பாறுதலில் பிரவேசித்தவர்கள்

12.10.2023 திரு. L. சூசைப்பாண்டி

20.10.2023 திருமதி. L. சந்திரா

கர்த்தருடைய இளைப்பாறுதலில் பிரவேசித்த இவரின் பிரிவினால் வாடும் குடும்பத்தின் பிள்ளைகளுக்கு தேவன்தாமே சமாதானத்தையும் ஆறுதலையும் அருளிச் செய்வாராக.

### மறக்க முடியாத மாமனிதர்கள்

# Dr. G.U. போப்

"செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உன் பெலத்தோடு செய்" என்ற வசனத்தின்படி செயல்பட்ட போப் ஐயர் 1820 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24ஆம் தேதி அருள்திரு. ஜாண் போப் கேத்ரின் தம்பதியருக்கு இரண்டாவது மகனாக இங்கிலாந்து நாட்டில் மெல்போர்ன் என்ற இடத்தில் பிறந்தார். ஊக்கமும் விடாமுயற்சியும் போப்பின் பிறவிக் குணங்கள். அவர் படிக்கும் புத்தகத்தின் ஒவ்வொரு

பக்கத்திலும் மேலும், கீழும் ஓரங்களிலும் நன்றாக குறிப்புகள் எழுதி கற்பதை பழக்கமாக கொண்டிருந்தார். போப்பின் தாய் பிள்ளைகளிடம் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தி ஒன்றுதான் மக்களின் அவலநிலையை மாற்ற முடியும் என்று அடிக்கடி கூறி வந்தார். போப் 13ம் வயதிலே நான் இந்தியாவிற்கு நற்செய்தியை அறிவிக்கும் ஓர் ஊழியனாக செல்ல விரும்புகிறேன் என்று தனது விருப்பத்தை பெற்றோரிடம் கூறினார். பெற்றோர் அளவற்ற மகிழ்ச்சியடைந்தனர். 18ம் வயதில் இந்தியாவிற்கு மிஷனெரியாக புறப்பட்டார். 8 மாத கடல் பயணம். 19ம் வயதில் இந்தியாவில் சென்னையில் வந்திறங்கினார். சென்னையில் மிஷனெரியாக பணி செய்த இராபர்ட் கார்லரின் மகளை 1841ஆம் ஆண்டு திருமணம் செய்தார். 1842ஆம் ஆண்டு உதவி குருப்பட்டம் சென்னையில் பெற்று மிஷனெரியாக சாயர்புரத்திற்கு அனுப்பப்பட்டார். 22வயது நிரம்பிய இளம் துடிப்பான வாலிபனான போப் தனது மனைவியோடு பாளையங்கோட்டைக்கு வந்து சில மாதங்கள் அங்கு தங்கியிருந்து பின் சாயர்புரம் வந்தார்.

இந்திய மக்களுக்கு இயேசுவை அறிவிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு சாயர்புரத்திற்கு வந்த போப் சாயர்புரத்து மக்களின் கல்வியற்ற நிலையைக் கண்டு மிகவும் வேதனை அடைந்தார். 1844ல் 12 பிள்ளைகளுடன் செமினெரி ஆரம்பித்தார். “முதல்வனாயிரு அல்லது முதல்வனோடிரு” என்பதை குறிக்கோளாகக் கொண்டு செமினெரியை நடத்தினார். மாணவர்களுக்கு நல்ல சாப்பாடு, நல்ல படிப்பு, நல்ல அடி.

போப் ஐயர் கல்விப் பணியை மட்டுமின்றி சுவிசேஷப் பணியையும் தீவிரமாக செய்து வந்தார். தனது கனிவான பேச்சு, அதிக அன்பு, மிகக் கடின உழைப்பு, நல்லொழுக்க நடத்தை இவற்றால் மக்களை கிறிஸ்துவுக்குள் வழிநடத்தினார். போப் சாயர்புரத்தில் முதல் கட்டிய கட்டிடமே தேவாலயம்தான். இப்போது தூய மார்ட்டின் துவக்கப்பள்ளியாக உள்ள கட்டிடமே அது. மிக குறுகிற காலமாகிய 7 ஆண்டுகளே போப்



சாயர்புரத்தில் பணி செய்திட்டபோதிலும் அந்த குறுகிய காலத்தில் அவர் செய்த பணிகள் உலகம் வியக்கும் விதமாக உயர்ந்ததாக இருந்தது. பின்னர் போப் தஞ்சாவூர், ஊட்டி, பெங்களூரில் பணி செய்து தனது 62வது வயதில் சொந்த நாடாகிய இங்கிலாந்துக்குச் சென்றார். அங்கு தமிழ் இலக்கியங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். 1908ம் ஆண்டு பிப்ரவரி 11ம் தேதி தமது 88ம் வயதில் தனது மண்ணுலக வாழ்வின் ஓட்டத்தை முடித்தார். போப் தனது வாழ்வில் தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் ஆற்றிய சேவையை எவராலும் மறக்கமுடியாது. ஆகவேதான் நமது தமிழக அரசாங்கம் அவர் தமிழுக்கு ஆற்றிய பணியை நினைவுகூர்ந்து அவரை கௌரவிக்கும் விதத்தில் சென்னை கடற்கரை சாலையில் டாக்டர் ஜி.யு. போப் சிலையை நிறுவியுள்ளது. இவரது கல்லறை இங்கிலாந்து நாட்டில் உள்ளது.

## அறிவிப்பு

1. **02.11.2023 வியாழக்கிழமை**
   **சகல ஆத்துமாக்களின் திருநாள் (கல்லறை திருநாள்) ஆசரிக்க இருப்பதால் அன்று மாலை 5 மணிக்கு SPG, கோமஸ்புரம் மற்றும் மாநகராட்சி கல்லறை தோட்டங்களில் ஆராதனைகள் நடைபெறும்.**
2. **11.11.2023 சனிக்கிழமை**
   **அன்று காலை 10.00 மணிக்கு மாதாந்திர உபவாச ஜெபம் நடைபெறும்.**
3. **26.11.2023 ஞாயிற்றுக்கிழமை**
   **அன்று மாலை 3.00 மணிக்கு மாதாந்திர சுவிசேஷ ஊழியம் நடைபெறும்.**
4. **15.11.2023 முதல் CARE அமைப்பு மூலம் கிறிஸ்மஸ் பவனி நடைபெறும்.**

நீ உன் வாலிபப்பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை. பிரசங்கி 12:1

CSI - தூத்துக்குடி – நாசரேத் திருமண்டலம்

# தூய பேட்ரிக் இணைப்பேராலயம்

## வாலிப பெண்கள் ஐக்கிய சங்கம்

## 7 வது ஆண்டு விழா

2023 நவம்பர் 12 ஞாயிறு

நேரம் : காலை 11.00 மணி

இடம்
தூய பேட்ரிக் இணைப் பேராலயம்
வடக்கூர், தூத்துக்குடி

கருத்து
முடிவு பரியந்தம் ... மத்தேயு 23:14

சிறப்பு செய்தி : திருமதி. புஷ்பா பாஸ்கர் அவர்கள்

**12.11.2023 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணி**

தூய பேட்ரிக் இணைப்பேராலய வாலிப பெண்கள் ஐக்கிய சங்கம்

மகிழ்ச்சியுடன் வழங்கும்



இருண்ட கண்டத்தின் வெள்ளை ராணி

**மேரி ஸ்லெஸர்** அவர்களின்

வாழ்க்கை வரலாறு ஒலி, ஒளி நாடகம்

ஜெபியுங்கள்! யாவரும் குடும்பமாக பங்குபெற அன்புடன் அழைக்கிறோம். பங்கு பெறுங்கள்!

| | | |
|---|---|---|
| Ms. S. தீபிகா | Mrs. தெபோராள் ஆனந்தமணி | Dn. T. ஆனந்தமணி |
| Ms. S. கிப்டி | Mrs. ஜெஸிலா காலேப் | Rev. M. காலேப் மேன்சிங் |
| ஒருங்கிணைப்பாளர்கள் | Mrs. கீதா செல்வின் | Rev. R.A.J. செல்வின் துரை |
| | பொறுப்பாளர்கள் | திருப்பணிவிடையாளர்கள் |

தூய பேட்ரிக் இணை பேராலய வாலிப பெண்கள் ஐக்கிய சங்கம்



நவம்பர் 2023

# வேதாகமத்திலிருந்து கேள்விகள்

**2 கொரிந்தியர்**

1. பவுலும் தீமோத்தேயுவும் எந்த ஆவியை உடையவர்களாயிருந்து பேசினார்கள்?
2. கொரிந்தியரிடம் எத்தனையாவது தரம் போக பவுல் ஆயத்தமாயிருந்தார்?
3. மரணத்துக்கேதுவான ஊழியத்தைச் செய்தவர் யார்?
4. பவுல் கொரிந்தியருக்கு சகலத்தையும் எதற்காக செய்கிறதாகக் கூறினார்?
5. நிருபத்தினாலே கொரிந்தியரை துக்கப்படுத்தினதை கண்டு மனஸ்தாபப்பட்டவர் யார்?
6. தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிறது எது?
7. பவுலும் தீமோத்தேயுவும் பாடுபடுகிறதுபோல பாடுபட்டு சகித்தவர்கள் யார்?
8. கொரிந்தியர்களுக்கு எப்படிப்பட்ட விருப்பம் உண்டாயிருந்தது?
9. யாரை காணாததினாலே பவுலின் ஆவிக்கு அமைதலில்லாதிருந்தது?
10. நாம் எந்த கூடாரத்திலே தவிக்கிறோம்?
11. தமஸ்கு பட்டணத்து ராஜாவாயிருந்தவர் யார்?
12. கற்புள்ள கன்னிகை என்று பவுல் யாரைக் குறிப்பிட்டார்?
13. “நாங்கள் ஒருவனையும் மாம்சத்தின்படி அறியோம்” – கூறியவர்கள் யார்?
14. கொரிந்தியர் தீத்துவை எப்படி ஏற்றுக்கொண்டார்கள்?
15. உத்தமன் என்பவன் யார்?
16. பவுல் கொரிந்து வழியாக எங்கே போக யோசனையாயிருந்தார்?
17. பரிசுத்தவான்களுக்கு செய்ய வேண்டியது எது?

18. தர்ம சகாயமாகிய பணிவிடை யாருடைய குறைவுகளை நீக்குகிறது?

19. எவர்கள் நடுவிலிருந்து பிரிந்து போக வேண்டும்?

20. பவுல் எத்தனைதரம் கல்லெறியுண்டார்?

21. ஒழிந்து போவதின் முடிவை நோக்கிப் பாராதவர்கள் யார்?

22. நற்கந்தமாயிருக்கிறோம் என்பதன் அர்த்தம் என்ன?

23. நித்தியமானவைகள் என்பது எது?

24. தேவன் எதின் விளைச்சலை வர்த்திக்கச் செய்வார்?

25. பரீட்சைக்கு நில்லாதவர்களாயிருந்தால் யார் தங்களுக்குள் இருக்கிறதை கொரிந்தியர் அறியார்கள்?

குறிப்புகள் :

1. A4 பேப்பரில் விடைகளை எழுத வேண்டும்.
2. **ஒரு கேள்விக்கு இரு வகையான பதில்கள் இருந்தால் அந்த கேள்விக்கு மதிப்பெண்கள் வழங்கப்பட மாட்டாது.**
3. **வசனத்தை அப்படியே எழுதக்கூடாது, விடைகளை மாத்திரம் எழுத வேண்டும்.**
4. இருப்பிடம் கட்டாயம் எழுத வேண்டும்.
5. 15ம் தேதிக்குள் விடைத்தாள்களை வேதவினா பெட்டியில் போட வேண்டும்

## எக்காள பண்டிகை – நன்கொடை கொடுத்தவர்கள்

**Mr. ஹேரீஸ் தேவதாஸ்**
**Dr. மோகன்தாஸ்**
**Mr. அருண்ராஜ்**
**Dr. பிரேமா பாலசந்திரன்**
**Mr. ஜெபசிங்**
**Mr. D. தனசிங்**
**Mr. D. ஜெபகுமார்**
**Mr. D. ஆண்ட்ரு மணி**
**Mr. J. ராஜ்மோகன் செல்வின்**

## சிற்றுண்டி வழங்கியவர்கள்

**Mr. T. பீட்டர் ஜோஸ்வா**
**Mr. T. சாமுவேல் ராஜ்**
**Mr. K. ஜெசுபாலன் தாமஸ்**
**Mr. G. ஜான் தாமஸ்**

*நன்கொடை கொடுத்தவர்கள், சிற்றுண்டி வழங்கியவர்களை திருச்சபையின் சார்பாக நன்றி கூறுகிறோம்.*



## அக்டோபர் மாத பதில்கள்

1கொரிந்தியர்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | துர்க்குணம், பொல்லாப்பு | – 5:8 | 13 | தேவனுடைய ஆவி | – 3:16 |
| 2 | விருத்தசேதனம் பெற்றவன் | – 7:18 | 14 | சமாதானம் | – 14:33 |
| 3 | சுயாதீனம் | – 10:29 | 15 | தேவஞானம் | – 2:7 |
| 4 | வரங்களை | – 12:31 | 16 | கண்ணாடியில் | – 13:12 |
| 5 | விவாகம் பண்ணியவர்கள் | – 7:28 | 17 | விக்கிரகம் | – 8:4 |
| 6 | கிறிஸ்து | – 1:23 | 18 | துஷ்டமிருகங்கள் | – 15:32 |
| 7 | விவேகி | – 6:5 | 19 | கொரிந்து சகோதரர் | – 6:1 |
| 8 | ஸ்தேவானுடைய வீட்டார் | – 16:15 | 20 | தேவ கிருபை | – 15:10 |
| 9 | 23,000 | – 10:8 | 21 | ஆக்கினை | – 11:34 |
| 10 | விசுவாசம் | – 2:4 | 22 | விசுவாசிகள் | – 14:22 |
| 11 | பவுல், அப்பொல்லோ | – 4:12 | 23 | ஸ்திரீ | – 11:12 |
| 12 | உற்சாகமாய் | – 9:17 | 24 | இருமாப்பு | – 4:6 |
| | | | 25 | எபேசு | |

## தேர்வு எழுதிய அனைவரையும் வாழ்த்துகிறோம்.

**சரியான விடை எழுதியவர்கள்**

திருமதி. பிரிடா ஹென்றி
திருமதி. விமலா ஜெயக்குமார்
திருமதி. ராணி இன்பராஜன்
திருமதி. குமாரி தாமஸ்
திரு. J. முத்துமாணிக்கம் ஆபிரகாம்

**வேதாகம புதிரில் கலந்து கொண்டவர்களை மதிப்பெண் அடிப்படையில் வாழ்த்துகிறோம்**

திருமதி. J. பத்மா ஜெபராஜ்
திருமதி. ஜோதி ஜெயராஜ்
திருமதி. D. எலிசபெத் நோவா
திருமதி. S. பரிபூரண பாக்கியவதி
திருமதி. மல்லிகா
திருமதி. N. அன்பு இன்பராஜ்
திருமதி. A. காஞ்சனா அசோகர்
திருமதி. செல்வி அருண்
திரு. K. சாலமோன் ராஜா
திருமதி. செலினா ஜெயபால்
திருமதி. J. மாலதி போர்டு
திருமதி. I. குளோரி ஜோசப்
திருமதி. K. ரெஜினா கோயில்மணி
திருமதி. A. புஷ்பராணி
திருமதி. P. மரினாள் சுகந்தி
திருமதி. J. லில்லி ஜெகநாதன்
திருமதி. சரோஜா ஜெபக்குமார்
திருமதி. K. விக்டோரியா கனகராஜ்
திருமதி. விஜயா ஜெபராஜ்
திருமதி. S. திலகராணி
திருமதி. கஸ்தூரி தமிழரசன்
திருமதி. T. எஸ்கிலின்
திருமதி. N. ஜான்சிராணி தாமஸ்
திருமதி. J. ஞான கிருபா விக்டோரியா
திருமதி. J. ஞானசீலி ஜோசப்
திருமதி. B. சாந்தி ஜாண்
திருமதி. M. ஞானபாய்

# விடுகதைகள்



1. வருடத்தின் தலைமேலே
   தகதகவென மின்னுது
   ஓர் தங்க கிரீடம் – அது என்ன?

2. காகங்கள் வாயில் முட்டை
   கழுகு குஞ்சிற்கு வேட்டை – அது என்ன?

3. வாலிபரின் கூட்டத்திலே
   பிரசங்கியாரின் செய்தியிலே
   மாயைகளில் இரண்டு
   மாறி மாறி முறைக்குது – அவை என்ன?

4. ஆடிப்பாடு ஆயம்மா
   தாளம் போடு தாயம்மா
   இஸ்ரவேலின் நடுவிலே
   எழுந்திருப்பது யாரம்மா – அவர் யார்?

5. ஆலயத்திற்குள் ஓடலாம்
   கதவுகளை பூட்டலாம்
   உள் அறையில் பதுங்கலாம்
   உயிர் பிழைக்க ஒதுங்கலாம் – யார், யாரிடம் கூறியது?

6. வர வர மாமியார் கழுதைப் போல ஆனாளாம்
   வர வர கொழுத்துப் போனானாம்
   நியாயப்பிரமாணத்தைக் கீழேப் போட்டானாம் – அவன் யார்?

## விடைகள்

1. நன்மை – சங் 65:11
2. தகப்பனைப் பரியாசம் பண்ணி தாயின் கட்டளைகளை அசட்டை பண்ணுகிறவனுடைய கண் – நீதி 30:27
3. இளவயதும் வாலிபமும் – பிர 11:10
4. இஸ்ரவேலின் பரிசுத்தர் – ஏசாயா 12:6
5. செமாயா, நெகேமியாவிடம் – நெகே 6:10,11
6. ரெகொபெயாம் – 2நாளா 12:1



தூத்துக்குடி சேகரம்

# 2023 செப்டம்பர் மாத

## வரவு

| | |
|---|---|
| Opening Balance | |
| Cash | 16350.00 |
| Bank | 275012.90 |
| Dio | 1417864.53 |
| குருமார் சங்கம் | 3863.00 |
| பேராயர் அலுவலக சங்கம் | 1343.00 |
| திருமண்டல அலுவலக சங்கம் | 10576.00 |
| பெண்கள் ஐக்கிய சங்கம் | 724.00 |
| கோயில் காணிக்கை | 74973.00 |
| பரி. நற்கருணை காணிக்கை | 102948.00 |
| ஸ்தோத்திர காணிக்கை | 147010.00 |
| பலவித காணிக்கை | 145.00 |
| சங்கக் காணிக்கை - சபை | 135915.00 |
| சங்கக் காணிக்கை - ஊழியர் | 10975.00 |
| ஏல வரவு | 3270.00 |
| ஞானஸ்நானம் | 13500.00 |
| தசமபாகம் | 75820.00 |
| தீபம் காணிக்கை | 3925.00 |
| வீடு சந்திப்பு காணிக்கை | 38260.00 |
| வேதாகம நிலையம் வரவுகள் | 930.00 |
| மிஷனெரி காணிக்கை | 3255.00 |
| திருமண அறிக்கை கட்டணம் | 4000.00 |
| பலவித வரவுகள் | 2986.00 |
| திருமண காணிக்கை | 11300.00 |
| சுவிசேஷ ஊழியம் வரவு | 36700.00 |
| Sunday School காணிக்கை | 2670.00 |
| Refund of Advances | 112549.00 |
| ஆசிரியர் குற்றாலம் கூடுகை வரவு | 2055.00 |
| Bank Interest | 2746.00 |
| விக்டோரியா பிரைமரி வேன் அட்வான்ஸ் வரவு | 51000.00 |
| மொத்தம் | 25,62,665.43 |

**Rev. R.A.J. SELWYN DURAI**
Pastorate Chairman

E & O E

# வரவு செலவு கணக்கு

## செலவு

| | |
|---|---|
| சேகர வீதாச்சாரம் | 4,00,000.00 |
| குருமார் அலவன்ஸ் | 7,500.00 |
| உபதேசிமார் ஊதியம் | 31,000.00 |
| கோயில் வேலைக்காரர் ஊதியம் | 90,100.00 |
| சேகர எழுத்தர்கள் ஊதியம் | 45,177.00 |
| உபவாச ஜெபம் செலவுகள் | 6680.00 |
| பழுது மற்றும் பராமரிப்பு பணி | 22717.00 |
| அச்சுக்கூலி | 14703.00 |
| ஆலய தேவைகள் | 10077.00 |
| மின் கட்டணம் | 883.00 |
| தொலைபேசி கட்டணம் | 2,893.00 |
| CCTV செலவுகள் | 1180.00 |
| உபசரணை செலவுகள் | 14100.00 |
| பாடகர் குழு ஞாயிறு செலவுகள் | 41195.00 |
| தமிழ் பாடசாலை செலவுகள் | 24695.00 |
| குற்றாலம் தியானக் கூடுகை (2 நாட்கள்) | 155433.00 |
| சுவிசேஷ ஊழியம் செலவுகள் | 96649.00 |
| சிறுவர் குற்றாலம் முகாம் | 15500.00 |
| வாலிபர் ஆண்டு விழா | 15000.00 |
| ஆசிரியர் தினம் செலவு Gift | 6645.00 |
| வேதாகம நிலையம் செலவு | 7000.00 |
| Advances | 87349.00 |
| Mission quarters Painting & repair work செலவுகள் | 66332.00 |
| Legal exp (தாசில்தார் சமாதான கூட்டங்கள் வகைக்கு வழக்கறிஞர் செலவு) | 15000.00 |
| Bank Charges | 177.00 |
| Closing Balance<br>Cash 5540.00<br>Bank 344769.90<br>Dio. 1034370.53 | 1384680.43 |
| மொத்தம் | 25,62,665.43 |

**Mr. P. JEBASINGH**
Pastorate Treasurer



| நவம்பர் | | | |
|---|---|---|---|
| 1 | சங்கீதம் 124 | பிலமோன் | எசேக்கியேல் 3-4 |
| 2 | சங்கீதம் 125 | எபிரேயர் 1 | எசேக்கியேல் 5-6 |
| 3 | சங்கீதம் 126 | எபிரேயர் 2 | எசேக்கியேல் 7-8 |
| 4 | சங்கீதம் 127 | எபிரேயர் 3 | எசேக்கியேல் 9-10 |
| 5 | சங்கீதம் 128 | எபிரேயர் 4 | எசேக்கியேல் 11-12 |
| 6 | சங்கீதம் 129 | எபிரேயர் 5 | எசேக்கியேல் 13-14 |
| 7 | சங்கீதம் 130 | எபிரேயர் 6 | எசேக்கியேல் 15-16 |
| 8 | சங்கீதம் 131 | எபிரேயர் 7 | எசேக்கியேல் 17-18 |
| 9 | சங்கீதம் 132 | எபிரேயர் 8 | எசேக்கியேல் 19-20 |
| 10 | சங்கீதம் 133 | எபிரேயர் 9 | எசேக்கியேல் 21-22 |
| 11 | சங்கீதம் 134 | எபிரேயர் 10 | எசேக்கியேல் 23-24 |
| 12 | சங்கீதம் 135 | எபிரேயர் 11 | எசேக்கியேல் 25-26 |
| 13 | சங்கீதம் 136 | எபிரேயர் 12 | எசேக்கியேல் 27-28 |
| 14 | சங்கீதம் 137 | எபிரேயர் 13 | எசேக்கியேல் 29-30 |
| 15 | சங்கீதம் 138 | யாக்போபு 1 | எசேக்கியேல் 31-32 |
| 16 | சங்கீதம் 139 | யாக்போபு 2 | எசேக்கியேல் 33-34 |
| 17 | சங்கீதம் 140 | யாக்போபு 3 | எசேக்கியேல் 35-36 |
| 18 | சங்கீதம் 141 | யாக்போபு 4 | எசேக்கியேல் 37-38 |
| 19 | சங்கீதம் 142 | யாக்போபு 5 | எசேக்கியேல் 39-40 |
| 20 | சங்கீதம் 143 | 1பேதுரு 1 | எசேக்கியேல் 41-42 |
| 21 | சங்கீதம் 144 | 1பேதுரு 2 | எசேக்கியேல் 43-44 |
| 22 | சங்கீதம் 145 | 1பேதுரு 3 | எசேக்கியேல் 45-46 |
| 23 | சங்கீதம் 146 | 1பேதுரு 4 | எசேக்கியேல் 47-48 |
| 24 | சங்கீதம் 147 | 1பேதுரு 5 | தானியேல் 1-2 |
| 25 | சங்கீதம் 148 | 2பேதுரு 1 | தானியேல் 3-4 |
| 26 | சங்கீதம் 149 | 2பேதுரு 2 | தானியேல் 5-6 |
| 27 | சங்கீதம் 150 | 2பேதுரு 3 | தானியேல் 7-8 |
| 28 | நீதி. 1 | 1யோவான் 1 | தானியேல் 9-10 |
| 29 | நீதி. 2 | 1யோவான் 2 | தானியேல் 11-12 |
| 30 | நீதி. 3 | 1யோவான் 3 | ஓசியா 1-2 |